
# வேதாகமத்தை திறக்க உதவும்

# திறவுகோல்கள்



# முன்னுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளாகிய உங்கள் அனைவருக்கும் நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் சமாதானமும் உண்டாவதாக..(கலா.,எபே.,பிலி.,1:2)

“வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.... (யோவான் 5:39) என்ற விசுவாசத்தோடு, இப்புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிற கர்த்தரின் சத்தியங்கள், வேதாகமத்தை ஆழ்ந்து தியானிக்கவும், தேவனுடைய வார்த்தைகளை ஏகமாய் ருசிபார்க்கவும் விரும்பும் தேவ பிள்ளைகளுக்கு ஏற்ற வழிகாட்டியாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு ஜெபத்துடன் வெளியிடுகிறோம்.

ஆவிக்குரிய விவேகத்தோடும் கர்த்தருடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்படவும், கர்த்தருக்கு பிரியமுண்டாக அவருக்கு பாத்திரராய் நடந்துகொள்ளவும் பரிசுத்தமான அவருடைய வார்த்தையை உள்ளபடி தியானிப்பது அவசியம்.

தேவனுடைய வார்த்தைகளில் சரியான புரிதல் இல்லாமல் இன்று பல்வேறு பிரிவுகளாக பிரிந்து இருக்கும் விசுவாசிகளுக்கு மத்தியில், அசத்தியங்களுக்கு விலகி தேவனுடைய தெய்வீக திட்டங்களையும், அவற்றின் நிறைவேறுதல்களையும் அவருடைய பரிசுத்த மனுஷர்களை கொண்டு அவர் வெளிப்படுத்தின வழியிலேயே புரிந்துகொண்டு அதன்படி ஒரே விசுவாசத்தோடு நடக்க இந்த புத்தகம் சிறு வெளிச்சத்தை கொடுக்கும் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த புத்தகத்தை வாசிக்கும் வாசகர்களுக்கு வெளியீட்டாளராக நாங்கள் கூறிக்கொள்வது, “இன்றைய விசுவாசிகள், வேதவசனங்களையும், அதின் விளக்கங்களையும் புரிந்து கொள்ளுவதில் உண்டாகும் தவறுக்கு, அதை கவனத்துடனும், ஆவியோடும், நிதானமாக ஆராய்ந்து தியானிக்காமல் போவதாலேயே. எனவே, தாங்கள் கர்த்தருக்கென்று ஒதுக்கும் மிக முக்கியமான நேரத்தில் இதுபோன்ற புத்தகங்களை தியானிப்பது உங்களை சத்திய வெளிச்சத்தில் வழிநடத்தும்” என்று தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறோம்.

இந்த புத்தகத்தை வாசிக்கும் யாவருக்கும் எங்களது மனமுவந்த வாழ்த்துக்கள் !

இங்ஙனம்,

**VELLORE BIBLE STUDENTS**

# பொருளடக்கம்


**1 - 2** வேதாகமத்தை முறைப்படி கற்பதின் அவசியம்

**3 - 9** “பரிசுத்த வேதாகமம்”

**10 - 13** வேதாகமத்தில் பால் ஆகாரம் - பலமான ஆகாரம்

**14 - 16** இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாம்

**17 - 26** “வானமும் பூமியும்” - ஒரு தலைப்பின் கீழ் படித்தல்

**19 - 20** நேரடி பாஷை, அடையாள பாஷை விளக்கம்

**27 - 32** “காணாமல் போன ஆடு” - உவமை பாணியில் படித்தல்

**33 - 42** “கர்த்தருடைய பஸ்கா” - நிழலும் பொருளுமாக படித்தல்

**43 - 44** சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக் கான அழைப்பு



# வேதாகமத்தை திறக்க உதவும் திறவுகோல்கள்


**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே!**

**“பரிசுத்த வேதாகமம்”**

இது முதன்முதலில் அச்சிடப்பட்டது மட்டுமல்லாமல், அநேகமுறை அச்சிடப்பட்டாலும், அநேக மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டிருந்தாலும், பல நூற்றாண்டுகள் கடந்தும் தன்னிலை மாறாமல் தேவனுடைய வார்த்தைகளை உள்ளபடி கொண்டிருக்கிற ஒரே தன்னிகரற்ற புத்தகமாக திகழ்கிறது.

நாம் கர்த்தரோடு தொடர்பு கொள்ளவும், அவரை அறிகிற அறிவில் வளரவும் நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிற ஒரே வாய்க்காலாக வேதாகமம் இருக்கிறது.






அதே வேளையில் இந்த வேதாகமத்தை முழுமையாக படித்து தேவனுடைய வார்த்தைகளை புரிந்து கொண்டேன் என்று ஒருவரும் சொல்லக்கூடாதபடிக்கு, அது ஒரு பூட்டப்பட்ட புத்தகமாகவும், அநேக காரியங்கள் ரகசியங்களாகவும் வைக்கப்பட்டு உள்ளது.



# இல்லை!

வேதாகமம் பூட்டப்பட்ட புத்தகமல்ல, அதில் உள்ள எல்லா காரியங்களும் வெளியரங்கமாய் எல்லோராலும் புரிந்து கொள்ளும்படிக்கே தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் சொல்வீர்களானால்.....




**ஒரே தேவனும்.... ஒரே கர்த்தரும்.... (1 கொரி. 8:6, எபே. 4:5)ஒரே வேதாகமமும் நமக்கு உண்டாயிருக்க இன்றைய கிறிஸ்தவ மண்டலம் ஏன் பல ஆயிரம் சபைகளாக பிரிந்து இருக்க வேண்டும்?**

இந்த பிரிவினைக்கு காரணம், உண்மையில் நாம் நம்முடைய வேதாகமத்தையும் அதில் உள்ள தேவனுடைய வார்த்தைகளையும், அவருடைய சித்தத்தையும் உள்ளபடி சரியாக புரிந்து கொள்ளாததேயாகும்.

மேலும் தேவனுடைய வார்த்தைகளையும் அவருடைய சித்தத்தையும் நாம் சரியாக புரிந்து கொள்ள, அவர் நமக்கு கற்றுத்தரும் அல்லது வெளிப்படுத்த நினைக்கும் வழியிலேயே நாம் கற்றுணர வேண்டும்.



**எனவே வேதாகமத்தை கற்று அறிய ஒரு முறைப்படுத்தப்பட்ட வழி அவசியம்.**

# “வேதாகமம்”

## BIBLE

இது “பிப்லோஸ்” என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதன்பொருள் – புத்தகம் ஆகும்! இது தேவனுடையதும், மிக வல்லமையுள்ளதும் ஆகும்.

இவ்வுலகமானது, அநேக மதங்கள் மூலமாக அநேக வேதங்களை பெற்றிருக்கிறது.




உதாரணமாக, இந்துக்களின் மத நூல்கள்கூட வேதங்கள் (ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம் மற்றும் அதர்வண வேதம்) என்று அழைக்கப்படுகின்றன.

ஆனால் BIBLE மாத்திரமே “பரிசுத்த வேதாகமம்” என்று அழைக்கப்படுகின்றது.

**ஆம், இது தேவன் தம்முடைய வார்த்தைகளை கொண்டு முழு மனுக்குலத்திற்கும் எழுதியிருக்கிற ஒரே புத்தகம் ஆகும்!**









பரிசுத்த வேதாகமத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன.




பழைய ஏற்பாடு — 39 புத்தகங்கள்

புதிய ஏற்பாடு — 27 புத்தகங்கள்

மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன.

ஆனால், கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் (ரோம கத்தோலிக்க நண்பர்கள்) வேதாகமத்தில் 66 க்கும் அதிகமான_புஸ்தகங்கள் உள்ளன என்று நம்புகிறார்கள்.

இது சரியா என்ற விவாதத்திற்கு பதிலாக, தேவனுடைய வார்த்தைகளில் இதற்கான பதிலைக் காணலாம்.

வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தைகளை ஆகாரத்திற்கு ஒப்பிட்டு “அப்பங்கள்” என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.


“உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது;....”
*(எரேமியா 15:16)*

“...மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்...”
*(உபாகமம் 8:3, மத்தேயு 4:4)*



“நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனைகளாக எழுதியிருக்கிறது.” (ரோமர் 15:4)

இந்த ஆவிக்குரிய அப்பங்கள் (புத்தகங்கள்) குறித்து முன்பு நிழலாய் எழுதியிருக்கிறதை நாம் கவனிக்கும் போது,



லேவியராகமம் 24:5-7)

“அன்றியும் நீ மெல்லிய மாவை எடுத்து, அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக;... அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின் மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து, ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து, ஞாபகக்குறியாகக் கர்த்தருக்கேற்ற தகனபலியாயிருக்கும்.”

இங்கு ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் சமூகத்து அப்பங்கள், ஒவ்வொரு அடுக்கிலும் ஆறு அப்பங்கள் வீதம் இரண்டு அடுக்குகளாக அடுக்கப்பட்டிருக்கும்.

**இது தேவனிடத்தில் இருந்து கிடைக்கப் பெறும் “ஆவிக்குரிய அப்பமாகிய” 66 புத்தகங்களை அடையாளப்படுத்துகிறது.**



“இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்,....” (எபிரேயர் 10:1)

**மேலும் இவ்வேதாகமத்தை எழுதுவதற்கு 1700 வருடங்கள் ஆனது!**

பழைய ஏற்பாடு எழுதுவதற்கு 1600 வருடங்களும்,

புதிய ஏற்பாடு எழுதுவதற்கு 100 வருடங்களும் ஆனது.

உலகில் வேறு எந்த புத்தகம் எழுதுவதற்கும் இவ்வளவு நீண்ட கால பகுதியை எடுத்துக் கொண்டதாக சரித்திரம் இல்லை!

**அதுமட்டுமல்ல, தேவன் தம்முடைய வார்த்தையை எழுத வெவ்வேறு, வித்தியாசமான பின்னனியுடைய 40 எழுத்தாளர்களைக் கருவியாக பயன்படுத்தினார். உதாரணமாக,**



**மோசே** நன்கு கற்றறிந்தவராகவும்
எகிப்தின் அடுத்த பார்வோன்
ஆவதற்கு பயிற்சி பெற்றவராகவும்
இருந்தார். (யாத். 2:10)



**பவுல்**
ஒரு
பரிசேயனாக
இருந்தார்.
(அப். 23:6)

**லூக்கா**
ஒரு மருத்துவராக
இருந்தார்.
(கொலோ. 4:14)





**மத்தேயு** ஒரு வரி
வசூலிப்பவராக
இருந்தார்.
(லூக்கா 5:27,28)




**சாலொமோன்**
ஒரு ராஜாவாக
இருந்தார்.
(1இராஜா. 2:12)

**தாவீது**
மேய்ப்பனாக இருந்து
பிற்காலத்தில்
ஒரு ராஜாவாக
ஆட்சி புரிந்தவர்.(1சாமு.16:19)



**பேதுருவும், யோவானும்**
மீனவர்களாக இருந்தனர்.
(மத்தேயு 4:18-21)



**இவ்வாறு இவர்கள் வெவ்வேறு நிலையில் இருந்து அழைக்கப்பட்டு எழுதியிருந்தாலும் எவ்வித முரண்பாடும் இல்லாமல் வேதாகமம் இசைந்த கருத்துக்களைக் கொண்டிருப்பது மிகுந்த ஆச்சரியமும், நம்பமுடியாததுமாக இருக்கிறது.**

**ஆமோஸ்**
ஒரு ஏழை மேய்ப்பனாக
இருந்தார்.
(ஆமோஸ் 7:14)





**இவை அனைத்தின் மூலம்,
வேதாகமமானது உண்மையில்,
மனிதர்களை கருவிகளாக
கொண்டு, தேவன் எழுதின புத்தகம்
என்று நாம் புரிந்து கொள்கிறோம்**

இதை கீழுள்ள வசனங்களை வாசித்து உறுதிப்படுத்தி கொள்ளலாம்.

*2பேதுரு 1:20,21*

"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."



கி.பி 1454ம் வருடம் அச்சடிக்கும் இயந்திரத்தை கண்டு பிடித்தவுடன் முதல் முதலில் அச்சடிக்கப்பட்டு, இன்றுவரை அதிகமாக அச்சடிக்கப்பட்ட புத்தகமாக நம் வேதாகமம் உள்ளது.

இன்று 2000 -த்திற்கும் மேற்பட்ட உலக மொழிகளில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

**ஆனாலும், இந்த வேதாகமம் மட்டுமே அதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை மற்றும் அடையாளங்களினால் அநேகரால் தவறாக புரிந்து**





உதாரணமாக,




**என (இன்னும்) அநேக சத்தியங்களில்
இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒத்த கருத்து
இருக்கிறதா?**

கிறிஸ்துவை - சத்தியத்தை அறிகிற அறிவில் வளரும் படிக்கே நாம் அறிவுறுத்தப்பட்டு ஒரே விசுவாசத்தின் கீழ்; ஒரே ஆவியினாலே கிறிஸ்தவர்களாய் அழைக்கப்பட்டிருக்கிறோம். (கொலோ.1:10, தீத்து 1:3, 2பேதுரு 1:2,3,8; 2:20; 3:18)

சத்திய வெளிச்சத்தில், ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரும்படிக்கே பூர்வகாலம் முதல் பங்குபங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கதரிசகள் மூலமாகவும் அவர் குமாரன் மூலமாகவும் அப்போஸ்தலர்கள் மூலமாகவும் நமக்கு சத்திய ஆகாரத்தை கொடுத்திருக்கிறார்.



**ஆம் வேதாகமம் தேவனிடத்திலிருந்து மனிதன்
பெற்ற ஆவிக்குரிய உணவாகும்.**
முன்பு வாசித்தப்படி,



".....மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்...." *(மத். 4:4, உபா. 8:3)*

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது;...." *(எரே. 15:16)*





நம் மாம்ச சரீரத்தின் ஆரோக்கியமான,
வளர்ச்சிக்கு நாம் எப்படி சீரான விகிதத்தில்
படிப்படியாக உணவு வகைகளை
எடுத்துக் கொள்கிறோமோ
அதேப்போல நம்முடைய
ஆவிக்குரிய
வளர்ச்சிக்கும் சீரான
ஆவிக்குரிய ஆகாரம்
எடுப்பது அவசியம்.

ஏனென்றால், நாம் இனி குழந்தைகளாயிராமல்...

"நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்,..." (எபேசியர் 4:11)

வளருகிறவர்களாயிருக்க வேண்டும்.

இந்த நம்முடைய வளர்ச்சியை குறித்து அப்போஸ்தலர் பவுல் தம்முடைய நிருபத்தில் குறிப்பிடும்போது,

"காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்." (எபிரேயர் 5:12-14)

**இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தேவையான ஆவிக்குரிய உணவுகளில் உள்ள வித்தியாசத்தை மிக தெளிவாக பால் ஆகாரம் - பலமான ஆகாரம் என்று எடுத்துகாட்டுகிறார்.**

நம் சரீர வளர்ச்சிக்கு பலவிதமான ஆகாரங்களை எடுத்துகொள்வதை போல ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் சத்திய ஆகாரத்தை பலவிதமாக எடுத்துகொள்ளவேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்தில் நாமும் குழந்தைகளைப் போல பால் ஆகாரத்தை எடுத்து இருப்போம்.

"சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்."
(1பேதுரு 2:2,3)





## ஆனால், நாம் இந்த பால் ஆகாரத்திலேயே நின்றுவிடக் கூடாது....

"ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்துபோவோமாக..." (எபிரேயர் *6:1-3*)

இங்கு பால் ஆகாரம் என்பது "மூல உபதேசங்களை" குறிக்கிறது.

ஆம், நாம் இதிலே நின்றுவிடாமல் பலமான ஆகாரத்தை புசித்து ஆவிக்குரிய ஜீவியத்தில் சீரான வளர்ச்சி அடைய வேண்டும்.

**ஆனால், வேதாகமம் முன் குறிப்பிட்டது போல ஒரு பூட்டப்பட்ட புத்தகமாக இருப்பதால், அதிலுள்ள மறைபொருள்களை அறிய நாம் வாஞ்சிக்கும்போது ஏற்ற திறவுக்கோல்களை தேவனே அவருடைய வசனங்களின் மூலம் கொடுக்கிறார்...**




"அவர் யாருக்கு அறிவைப் போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்?

பால்மறந்தவர்களுக்கும், முலை மறக்கப் பண்ணப் பட்டவர்களுக்குமே." (ஏசாயா *28:9*)



# திறவுக்கோல் - 1

## "ஒரு தலைப்பின்கீழ் படிப்பது"

## *Exhaustive Topical Examination*

"கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்." (ஏசாயா *28:9,10*)

இந்த வசனத்தின் பொருள் என்ன என்று நீங்கள் புரிந்துள்ளீர்களா? என்றால் அநேகருடைய பதில் "இல்லை" என்பதே ஆகும். இவ்வசனமே வேதாகமத்தை திறக்க உதவும் முதலாவது திறவுக்கோலாகும்.

**கற்பனையின் மேல் கற்பனையும்...**
**பிரமாணத்தின் மேல் பிரமாணமும்....**

### இதன் பொருள் என்ன?

இங்கு "கற்பனை" என்பது... உபதேசங்கள் (அ) கட்டளைகள் (அ) பாடங்களையும், "பிரமாணம்" என்பது வசனங்களையும் குறிப்பதாகும்.

இதன் மூலம் வேதாகம உபதேசங்களை (கற்பனைகள்) புரிந்துகொள்ள ஒரு ஒழுங்குமுறை உள்ளதென்றும், அந்த உபதேசங்கள் முறையான வசனங்கள் (பிரமாணம்) அடிப்படையில் அமைந்திருக்கும் என்றும் அறிகிறோம்.

**அதாவது தேவனுடைய கற்பனைகளை பாடங்களாக ஒரு தலைப்பின் கீழ் பிரமாணங்களாகிய ஏற்ற வசனங்களை கொண்டு தியானிப்பது பற்றி இந்த முதல் திறவுக்கோல் விளக்குகிறது.**

மேலும் இந்த வசனத்தின் கடைசி பாகத்தை பார்க்கும் போது "இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்" என்பதையும் கவனியுங்கள்.






## இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்....

அதாவது ஒரு தலைப்பின்கீழ் ஆராய்வதற்கு தேவையான வசனங்கள், சொல்லியிருக்கிறபடி "இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாய்" வேதத்தில் சிதறடிக்கப்பட்டிருக்கின்றன.

இதை ஒரு உதாரணத்தோடு பார்க்கலாம்; வேதத்தில் மரிக்காத ஒரு மனுஷனை பற்றி சொல்லப்பட்டிருப்பது உங்களுக்கு தெரியுமா?

## ஆம் அவர் பெயர் ஏனோக்கு..

ஏனோக்கை பற்றிய விவரங்கள் வேதத்தில் மூன்றே  வசனங்களில் மட்டுமே சொல்லப்பட்டு அந்த வசனங்களும் அங்கும் இங்குமாக சிதறடிக்கப்பட்டிருக்கிறது.






## இவ்வாறு வசனங்கள் "இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமும்" சிதறடிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன?

"அவரே அவைகளுக்குச் சீட்டுப்போட்டார்; அவருடைய கையே அதை அவைகளுக்கு அளவுநூலால் பகிர்ந்து கொடுத்தது;...." (ஏசாயா 34:17)

இங்கே சீட்டு என்ற வார்த்தை புரிந்து கொள்ள அந்நியமாக தோன்றலாம். எவ்விதத்தில் தேவன் தம்முடைய சத்தியங்களுக்கு "சீட்டு" போட முடியும்?



ஒரு முழுமையான பொருள் தரக்கூடிய ஒரு வாக்கியத்தை (அ) ஒரு விளக்கத்தை ஒரு காகிதத்தில் எழுதி அதை துண்டு துண்டாக சிதறடிக்கப்பட்டு ஒரு பாத்திரத்தில் வைத்திருப்பது போல...

ஆம், அதைப்போலவே தேவன் தம்முடைய சத்திய போதனைகளை வசனம் வாரியாக "பிரமாணத்தின் மேல் பிரமாணமாக" பிரித்து, (போதனைக்கு ஆதாரமான வசனங்களை மறைத்து) வேதத்தில் உள்ள 66 புத்தகங்களுக்குள் இங்கும் அங்குமாக சிதறடித்திருக்கிறார்.

**இது சத்தியத்தை பூட்டுகிற தெய்வீக முறை!**

இப்பொழுது முதலாவது திறவுக்கோலை கொண்டு ஒரு (கற்பனையின் மேல்) தலைப்பின் மேல், உதாரணமாக "வானம்-பூமி" என்ற தலைப்பை கொண்டு சத்தியத்தை ஆராய்ந்து பார்க்கலாம்.





"வானம், பூமி அழிந்து போகும்"

(2பேது. 3:10, செப். 3:8, மத்.24:35)



"பூமி என்றைக்கும் நிலைத்து இருக்கும்"

(சங்கீதம் 104:5, பிரசங்கி 1:4, ஏசாயா 45:18)



"புதிய வானம்,பூமி உண்டாகும்"

(2பேதுரு 3:13, வெளி. 21:1)

".....பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்." *(செப்பனியா 3:8)*
"...அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." *(2பேதுரு*

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை." *(மத்தேயு 24:35)*

இங்கு வானமும், பூமியும் ஒழிந்துபோகும் என்று சொல்லப்படுகிறது.

ஆனால் சங்கீதம், பிரசங்கி, ஏசாயாவில் பார்க்கும்பொழுது,
"பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்." *(சங்கீதம் 104:5)* "ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." *(பிரசங்கி 1:4)*

என்று சொல்லப்படுகிறது. பூமி என்றைக்கும் நிலைத்திருக்கும், அதன் அஸ்திவாரங்கள் ஒரு போதும் நிலைபெயராது, பூமியை ஒருபோதும் நகர்த்தவும், அழிக்கவும் முடியாது எனப்படுகிறது.



அதுமட்டுமல்லாது, பேதுரு மற்றும் யோவான் அப்போஸ்தலர்கள்,

"அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." *(2பேதுரு 3:13)*

"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று." *(வெளி. 21:1)* என்கிறார்கள்.

## இதை எப்படி புரிந்துகொள்வது?

இங்கு பூமியை குறித்த வசனப்பகுதிகளை **"இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமும்"** ஆராய்ந்து பார்க்கும்போது ஒன்றுக்கொன்று முரண்பாடான விவரங்களை தருவதுபோல் தோன்றுகிறது.

இந்த முரண்பாடுகளை களைய இந்த வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள **"மொழிநடைகளை"(பாஷைகள்)** கவனிக்க வேண்டும்.

## இது வேதாகமத்தை திறக்க உதவும் இரண்டாவது திறவுக்கோல் ஆகும்!

# திறவுக்கோல் - 2

## "மொழிநடை அறிந்து தியானித்தல்"



"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."
(2தீமோ. 2:15)

ஆம் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கவேண்டும். பொதுவாக மனிதர்கள் எழுதும்போது அநேக மொழிநடைகளை பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக, கவிதை பாணி, உரை நடை, நாடக பாணி என்று.....

அதேபோல், வேதாகமமும் மூன்று முக்கிய மொழி நடையில்(பாஷை) எழுதப்பட்டுள்ளது. எனவே நாம் தியானிக்கும் வசனங்கள் எந்த மொழி நடையில் எழுதப்பட்டுள்ளது என்பதை நிதானமாக பகுத்தறிவதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

### 1.நேரடி (மொழிநடை) பாஷை

உதாரணமாக,

"தேவதூதன் அவளை நோக்கி:... இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்;
அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார்,
உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்;
கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய
தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக்
கொடுப்பார்." லூக்கா 1:30-32





வேதத்தின் பெரும்பகுதி இவ்விதமாக நேரடியான பாஷையில் எழுதப்பட்டுள்ளது. இதை புரிந்து கொள்வதில் எவ்வித கடினமும் இல்லை. ஆனால் முழுவேதாகமும் இப்படி எழுதப்படவில்லை.

### 2.அடையாள (மொழிநடை) பாஷை

இது அடையாளங்களை பயன்படுத்தி, மாபெரும் தீர்க்கதரிசனங்களின் பொருள்களை மறைத்து வைக்கும் பாணியாகும். வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும் இவ்வித அடையாளங்களால் நிறைந்ததாகும்.

இந்த அடையாளங்களுக்கான "பொருள்" (அ) "அர்த்தம்" வேதாகமத்திலேயே கொடுக்கப்பட்டும் இருக்கின்றன.




நாம் முதலாம் திறவுக்கோலில் "வானம் - பூமி" என்ற தலைப்பின்கீழ் பார்த்த வசனங்களும் இதேபோல அடையாளங்களாக சொல்லப்பட்டவையே! இதில் சொல்லப்பட்ட "வானம் - பூமி"என்பதற்கான அடையாளங்களை இப்பொழுது காணலம்.



வேதாகமத்தில் "வானம்" என்பதற்கு மூன்று அர்த்தங்கள் உள்ளது

## 1. HEAVEN

"தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக." (பிரசங்கி 5:2)

இங்கு சொல்லப்பட்ட "வானம்" தேவன் வாசம் செய்யும் ஸ்தலம் அதாவது பரலோகத்தை குறிக்கிறது.

இந்த அர்த்தத்தை நாம் (தலைப்பின்கீழ்) எடுத்துகொண்ட வசனத்துக்கு பொருத்திப்பார்க்கலாம்.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை." (மத்தேயு 24:35)

மேற்கண்ட வசனத்திலுள்ள "வானம்" என்ற சொல்லுக்கு பரலோகம் என்று பொருத்திப்பார்த்தால் பரலோகம் அழிந்து போகுமா?

**நிச்சயம் இல்லை!**





## 2. SKY

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது." (சங்கீதம் 19:1)

இது நாம் கண்களால் பார்க்கக்கூடிய சூரியன், சந்திரன், நட்சத்திர கூட்டங்கள் கொண்ட வானத்தை குறிக்கிறது.

இங்கு சொல்லர்த்தமாக சொல்லப்பட்ட வானத்தை பொருத்தி பார்த்தாலும், அது சிருஷ்டிக்கப்பட்ட நாள் முதல் பரந்து விரிந்து எண்ணிலடங்கா நட்சத்திர கூட்டங்களோடு, இன்னாள் வரைக்கும் அவர் நியமித்தபடி கீழ்படிந்து தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தி வருகிறது. இதை அழிக்க அவசியமில்லை...



அப்படியென்றால் மத்தேயு 6:10 -ல் சொல்லப்பட்ட அழிந்து போகக்கூடிய வானம் எது என்று பார்க்கும்பொழுது..



" அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற **ஆகாயத்து அதிகாரப் பிரபுவின்** ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்." (எபேசியர் 2:2)

**கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபு யார்?**

அது மட்டுமல்ல,

"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், **வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின்** சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." (எபேசியர் 6:12)

**வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள் யார்?**

**ஆம் சாத்தானும், அவனுடைய (விழுந்துபோன) தூதர்களுமே!**

தேவனுக்கு கீழ்ப்படியாத மனிதர்களை கொண்டு கண்ணுக்கு தெரியாமல் சாத்தானும் அவனுடைய தூதர்களும் வானத்திலிருந்து செய்யும் அரசாட்சி பற்றி இங்கு (எபேசியர் 2:2,6:12) குறிப்பிடப்படுகிறது.

**இது வானத்திற்குரிய மூன்றாவது அர்த்தம்.**

**இதுவே அழிந்து போகப் போகிற "வானம்" ஆகும்.**

இதே போன்று பூமியும் சொல்லர்த்தமாக அல்லாமல், பூமியின் மாபெரும் அமைப்புகளாகிய,

**1.சமுதாயம், 2.அரசியல், 3.மதம், 4.பொருளாதாரம்**

ஆகிய இவைகளையே அடையாளப்படுத்துகிறது.

**இதுவே அழியப்போகிற "பூமி" ஆகும்.**

"இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து அதின் குடிகளைச் சிதறடிப்பார்... தேசம் முழுதும் கொள்ளையாகி முற்றிலும் வெறுமையாகும்; இது கர்த்தர் சொன்ன வார்த்தை. (ஏசாயா 24:1,3) தேசம் நொறுங்கவே நொறுங்கும், தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும். வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்;..." (ஏசாயா 24:19,20)

இந்த பொல்லாத,

**வானமும் (கண்ணுக்கு தெரியாத சாத்தானின் அரசாட்சி)**

**பூமியுமே (பூமிக்குரிய மனித அமைப்புகள்)** அழிந்துபோகும்.

பின்பு.....

**சமுதாயம்**



**அரசியல்**



**மதம்**



**பொருளாதாரம்**





# புதிய வானம், புதிய பூமி..

"பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின;......" *(வெளி. 21:1)*

"இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை. நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்;..." *(ஏசாயா 65:17,18*

**முந்தின பொல்லாத (வானமும், பூமியும்) அரசாட்சி நீக்கப்பட்டு, நீதி வாசம் செய்யும் நமது ஆண்டவரின் ராஜ்யம் (புதிய வானமும், பூமியும்) ஸ்தாபிக்கப்படும்.**

".....இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார்." *(தானியேல் 7:13)*

# இது என்றென்றும் அழிவில்லாதது!

"சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." *(தானியேல் 7:14)*

[குறிப்பு: இது "வானம் பூமி" தலைப்பை பற்றின சுருக்கம் மட்டுமே; முந்தின வானமும்-பூமியும் எப்படி அழிக்கப்படும் என்றும் புதிய வானம்-பூமி எப்படி ஸ்தாபிக்கப்படும் என்பதை பற்றின விளக்கத்தை தொடர் பாடங்களில் தியானிக்கலாம்.]

இவ்வாறு "ஒரு தலைப்பின்கீழ் படித்தல்" மூலம் வேதவசனங்களில் உள்ள ஆழத்தை அறிந்து கொள்ளவும், அதில் உள்ள முரண்பாடுகளை களைந்து தேவனுடைய திட்டத்தை சரியாக புரிந்து கொள்ளவும் முடியும்.

**மேலும், ராஜ்யத்தின் ரகசியங்கள் மற்றொரு முக்கிய மொழிநடையிலும் சொல்லப்பட்டுள்ளது.**

**அது.....**



## 1.உவமை (மொழிநடை) பாஷை

உவமை என்பது சொல்ல விரும்பும் காரியத்தை ஒரு சிறு கதை மூலம் மறைமுகமாக வெளிப்படுத்துவது ஆகும். இவற்றை நேரடியாக புரிந்து கொள்ளக்கூடாது. மாறாக, ஆவிக்குரிய வகையில் புரிந்துக்கொள்ள வேண்டும்.

இதை ஒரு உதாரணத்தோடு பார்ப்போம்...

**லூக்கா *15:4-7***

"உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ? கண்டுபிடித்தபின்பு, அவன் சந்தோஷத்தோடே அதைத் தன் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன், என்னோடுகூட சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா? அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இது புதிதாக ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது அவருக்காக வாசிக்கப்படும் பிரசித்தமான உவமையாகும்.

**அவர்தான் காணாமல் போன ஆடு என்று எண்ணி, அநேகர் இவ்வசனம் தனிப்பட்ட பாவிகளையும், அவர்கள் தேவனிடத்தில் மனந்திரும்புதலையும் பற்றி கூறுகிறது என்று நினைக்கின்றனர்.**

**இது சரியா?**

**காணாமல் போன ஆடு, அந்த ஒரு தனிப்பட்ட பாவியை குறிக்குமெனில் மற்ற எல்லோரும் நீதிமான்களா?**



பூமியில் அப்படிப்பட்ட நீதிமான்கள் இருக்கிறார்களா?

"அந்தப்படியே:
நீதிமான் ஒருவனாகிலும்
இல்லை;
உணர்வுள்ளவன் இல்லை;
தேவனைத் தேடுகிறவன் இல்லை;
எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க்
கெட்டுப்போனார்கள்;
நன்மைசெய்கிறவன் இல்லை,
ஒருவனாகிலும் இல்லை."

*(ரோமர் 3:10-12)*

**அப்படி என்றால் மனந்திரும்ப அவசியமில்லாத அந்த 99 நீதிமான்கள் யார்?**

உண்மையில் இந்த உவமை தனிப்பட்ட பாவிகளை பற்றிக்கூறும் உவமையே அல்ல.

**இதன் பொருளை சுருக்கமாக பார்க்கலாம்...**





## ஒரு மனுஷன்

இது சகல சிருஷ்டிக்கும் அதிபதியாகிய பிரதான மேய்ப்பனாகிய தேவனை குறிக்கிறது. (சங்.23:1)

## 100

இங்கு 100 என்பது எண்ணிக்கையை குறிக்காமல் ஒரு முழுமையை குறிக்கிறது. அதாவது பரிபூரணத்தை குறிக்க நாம் 100% என்று சொல்லுவோம் அல்லவா அதுபோல!

## 100 ஆடுகள்

எனவே 100 ஆடுகள் என்பது கர்த்தர் சிருஷ்டித்த சகல (முழு) சிருஷ்டியையும் குறிக்கிறது.

தூதர்கள், வானம், பூமி, நட்சத்திர கூட்டங்கள், சமுத்திரம், மிருகங்கள், பறவைகள், விருட்சங்கள், மச்சங்கள், மனிதர்கள் என அனைத்து முழு சிருஷ்டிகளையும் குறித்த முழுமையை குறிக்கிறது.

## 99 நீதிமான்கள்

பொதுவாக நீதிமான் என்று எதை கொண்டு குறிப்பிடுவோம்? தேவ கட்டளைக்கு கீழ்படிந்து தனக்கு நியமித்த நியதியின் படி நடப்பதை கொண்டே "நீதிமான்" என்போம்.

ஆம் தேவன் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளுக்குள் ஒரே ஒரு சிருஷ்டியை தவிர மற்ற எல்லா சிருஷ்டிகளும் அதற்கு நியமித்த கட்டளையின்படி தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறது.

வானமும்(ஆதி. 9:13), பூமியும்(யோபு 26:7), காற்றும்(மாற்கு 4:41), கடலும்(யோபு 38:11), மச்சங்களும்(யோனா 1:17), மிருகங்களும்(தானி. 6:22), விருட்சங்கள்(லேவி. 25:20-22) என உயிருள்ள, உயிரற்ற எல்லா சிருஷ்டிகளும் தேவனுக்கு கீழ்ப்படிகிறது.

**கீழ்ப்படியாமல்,**
**காணாமல் போன**
**ஒரே ஆடு....?**





## “காணாமல் போன ஆடு”

இது சகல சிருஷ்டிகளிலும் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போன மனிதனை குறிக்கும்.

ஆதாம் மூலமாய் வந்த முழு மனுக்குலமும் கீழ்ப்படியாமைக்குள் போய் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை பெற்று தேவ சமூகத்தை விட்டு விலகி போனார்கள்.



“நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்;..” ‘ (ஏசாயா 53:6)

“பாவத்தின் சம்பளம் மரணம்;......” (ரோமர் 6:23)



### “காணாமல் போன ஆட்டை கண்டுபிடிக்க....”

காணாமல் போன இந்த ஆட்டை தேடவும், மீட்கவும் தனது ஒரே பேரான குமாரனை இந்த பூமிக்கு அனுப்பி வைத்தார்.

“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” (யோவான் 3:16)





### கண்டுபிடித்தபின்பு..... வீட்டுக்கு வந்து, சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து: ...”

### “இதினிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாகும்”

இங்கு வீடு என்பது நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து புறப்பட்டுவந்த பரலோகத்தை குறிக்கிறது.

தேவ சாயலின்படியும், ரூபத்தின்படியும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் கீழ்ப்படியாமையினால் அதை இழந்து போனான். இந்த மனிதனை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டு மீண்டும் தேவ சாயலுக்கு சீர்பொருந்தபண்ணி

தேவ சமூகத்திற்கு கொண்டுவந்ததினிமித்தம்





தேவ தூதர்களிடத்திலும் பரலோகத்திலும் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.

இதையே அன்று பெத்லகேமின் புல்வெளியில் தேவ தூதர்கள்

காணாமல் போன ஆட்டை திரும்ப கொண்டுவர இயேசு கிறிஸ்து பிறந்ததை, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி என்று அறிவித்தனர்.(லூக்.2:10)

இது இந்த உவமைக்கான சிறு விளக்கம் மாத்திரமே!

ராஜ்யத்தின் இரகசியங்களை இப்படி சிறு கதைகள் மூலம் 39 சிறிய பெரிய உவமைகளாக இயேசுகிறிஸ்து அறிவித்தார்.

மேலும், இந்த இரட்சிப்பின் திட்டத்தை நிழலாகவும் பழைய ஏற்பாட்டு காலத்தில் அநேக இடங்களில் நிகழ்த்தி காட்டியிருக்கிறார். இந்த நிழல்களையும் நாம் உற்று தியானிக்க வேண்டும்.

### ஆம் இதுவே நாம் அடுத்து பார்க்க போகும் திறவுக்கோல்!

# திறவுக்கோல் - 3

## TYPE & ANTITYPE

## நிழலும் பொருளும்

"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால்,.." (எபிரேயர் 10:1)

இங்கு அப்.பவுல் இஸ்ரயேலர்களின் நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மைகளுக்கு ஒரு "நிழலாய்" இருக்கிறது என்கிறார்.

எப்படி ஒரு கட்டிட கலைஞர் வீடு கட்டும் முன்பு ஒரு மாதிரி வீட்டை செய்து காண்பிப்பாரோ, அதுபோலவே பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்த (நிழல்கள்) காரியங்கள் எல்லாம் நமக்கு ஒரு "மாதிரியாக" இருக்கிறது.

இஸ்ரயேல் மக்கள் செலுத்திய பலிகள் எல்லாம் வரப்போகிற உண்மையான பலிகளுக்கு நிழலாய் மாத்திரமே இருந்தது.



இதை புரிந்து கொள்வதற்கு, உதாரணமாக இஸ்ரயேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட முதல் நியாயப்பிரமாண கட்டளையாகிய "பஸ்கா" குறித்து வாசிக்கலாம்.

### யாத்திராகமம் 12:1-11

"கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாய் இருப்பதாக. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற் போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அயல் வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத் தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும்; அவனவன் புசிப்புக்குத் தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்;



செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள். பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக. அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக. அதைப் புசிக்க வேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா."

### இவையனைத்தும் எதைக் குறிக்கிறது?

"ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது." (கொலோ. 2:16,17)

### ஆம், இவைகளின் பொருள் கிறிஸ்துவை பற்றினது.

இங்கு பஸ்காவாக எடுத்து கொள்ளப்பட்ட "ஆடு" கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நிழலாய் இருக்கிறது.



"...அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும்..."

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." (யோவான் 1:29)

"......ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே." (1கொரி.5:7)

ஆட்டுகுட்டி விசேஷமாக கபடற்ற விலங்காகவும், தற்காத்துகொள்வதற்கோ (அ) எதிர்பதற்கோ முற்றிலும் தயாரற்ற விலங்காக இருக்கும்.

நமதாண்டவரும் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் மட்டுமல்லாமல் தன்னை பலியாக எந்த வித மறுப்பும், எதிர்ப்பும் இல்லாமல் ஒப்புக்கொடுத்தார்.



“…இந்த மாதம்… உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக…”

இஸ்ரயேலர்களுடைய வருட காலண்டரில் முதல் மாதமாக “நீசான்” மாதம் வரும். இதை இவர்கள் “ஆபீப்” மாதம் என்றும் அழைக்கின்றனர்.

இது நாம் பயன்படுத்தும் காலண்டரில் மார்ச்-ஏப்ரல் மாதங்களுக்கு இடையே வரும்.





“இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள்…”

நீசான் (ஆபீப்) மாதம் 10ம் தேதி பலிக்கான ஆடு தெரிந்து கொள்ளப்பட்டது.



அதேபோல, பஸ்காவுக்கு 5 நாட்களுக்கு முன்பு (மார்ச்-29,கி.பி.33) இயேசுகிறிஸ்து கழுதைக்குட்டியின் மீது ஏறினவராக தன்னை பலிகொடுக்கும்படியாக எருசலேமுக்குள் நுழைந்து அவர்களிடம் ஒப்புக்கொடுத்தார்.

“பஸ்கா பண்டிகை வர ஆறுநாளைக்குமுன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு,…”(யோவான் *12:1,12-15,* மத். *12:12-15,* மாற்கு *11:7-11*)








From
Sundown to Sundown
Referred to as:
“Night & Day”

From
Midnight to Midnight
Referred to as:
“ Day& Night”

“….அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து,…”

நிழலான ஆட்டுக்குட்டியானது எப்படி முதலாம் மாதத்தின் 14ம் தேதி அடிக்கப்பட்டதோ, அதேவேளையில் இயேசுகிறிஸ்து சீஷர்களோடு



(ஏப்ரல்-2,கி.பி.33) பஸ்காவை அனுசரித்து, அன்று இரவே காட்டிகொடுக்கப்பட்டு நீசான் மாதம் 14-ம் தேதியின் கடைசி வேளையிலே (ஏப்ரல்-3,கிபி.33) சிலுவையில் அறையப்பட்டு நிஜமான பலியை செலுத்தினார்.

(யூதர்கள் நாள் கணக்கின்படி நீசான்-14ம் நாளானது, ஏப்ரல்-2ம் தேதி மாலை துவங்கி ஏப்ரல்-3ம் தேதி மாலை வரை)





“...அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து,..

இங்கு நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்படுவதின் நிழலானது “விசுவாசவீட்டாரின்” இருதயங்களில் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கொடுக்கப்பட்ட மீட்பின் மீது கொண்ட விசுவாசத்தை ஏற்றுக்கொள்வதின் நிஜமாயிருக்கிறது.

மரண ஆக்கினை அவர்களை கடந்துபோகும்வரை இரவு முழுவதும் எப்படி இரத்தம் பூசப்பட்ட வீட்டிற்குள் இருந்து(யாத்.12:22) காலையில் விடுதலை பெற்றார்களோ அப்படியே, நாமும் பாவத்தின், மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற நீதியின் சூரியன் உதிக்குமளவும் இயேசுகிறிஸ்துவின் பலியின்மீது கொண்ட விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் பலியே, நம்முடைய நம்பிக்கை, சந்தோஷம், ஆசீர்வாதத்திற்கான அஸ்திபாரம் என்பதை முழுமையாக ஏற்கவேண்டும்.







“...அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு,..... பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக...”

இது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்து, அவர் அனுபவித்த பாடுகளையும் உபத்திரவங்களையும் அடையாளப்படுத்துகிறது.

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை இரட்சகராகவும், போதகராகவும், ஆசீர்வதிப்பவராகவும் மட்டும் பாராமல் நம்முடைய ரட்சிப்புக்காக அவர் அனுபவித்த ஒவ்வொரு பாடுகளையும் நமக்கு உணர்த்துகிறது.

பொதுவாக புசிப்பது என்பது ஒரு பொருளை உட்கொண்டு அதை நமக்குள்ளாக ஜீரணிப்பதை... குறிக்கிறது.

தலை : அவருடைய சிந்தை (பிலி.2:5)

கால் : அவருடைய நடத்தை-வாழ்க்கைமுறை(எபி. 5:8)

அவருடைய சரீரம் என முழுவதுமாக அவரை நமக்குள் உள்வாங்கிக் கொள்ள(புசிக்க) வேண்டும்.

அப்பொழுதுதான் நாம் அவருடைய சீஷர்களாக அவருடைய சாயலுக்கு மாறமுடியும்.



“இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.”*(1பேதுரு 2:21)*



## “.....புளிப்பில்லாத அப்பம் மற்றும் கசப்பான கீரை....”

கர்த்தருடைய “மாதிரியின்படி” அவரை பின்பற்ற முன்வரும் அவருடைய சீஷர்கள் கண்டிப்பாக இந்த புளிப்பில்லாத அப்பத்தையும் கசப்பான கீரையையும் புசிக்கவேண்டியதை இது அடையாளப்படுத்துகிறது.

### “புளிப்பு”

“...பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.” *(1கொரி.5:8)*

**புளிப்பில்லாத அப்பம் தேவனுடைய பரிசுத்தமான வார்த்தைகளை குறிக்கிறது.**

### “கசப்பான கீரை”

இருள் சூழ்ந்த இந்த உலகத்தில் சத்தியத்தின்படி நடக்க முயற்சிக்கும் பொழுது நாம் சந்திக்கவேண்டிய அனுதின உபத்திரவங்களை குறிக்கிறது.

“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.”*(2தீமோ. 3:12)*

“ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.”*(1கொரி. 5:7)*







## “...அன்று ராத்திரியிலே..... புசிக்கக்கடவர்கள்..... ”

நிழலில் மரணமானது காலை வேளையில் கடந்துபோகாமல் இரவிலே நடைபெற்றது. காலை வந்தபோதோ இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து விடுதலைப் பெற்றனர். இரவு முழுவதும் அவர்கள் அடிமைத்தனத்திற்குள் இருந்தனர்.

நிஜத்தில் இந்த இரவானது (விடியலுக்கு முன்னான) பாவத்தின்-மரணத்தின் அடிமைத்தனத்திற்குள் இருக்கும் இந்த சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது.


*“...சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். - weeping may endure for a night, but joy cometh in the morning.”* (சங்கீதம் 30:5)

மேலும் அப்போஸ்தலன் பேதுருவும்,

“அதிக உறுதியான தீர்க்கதரிசனமும் நமக்கு உண்டு; பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.” *(2பேதுரு 1:19)* என்கிறார்.

ஆம் இந்த இராத்திரியை(இருளுள்ள ஸ்தலத்தை) நாம் கடக்க (புசிக்க) தக்க ஒளியாய் இயேசுகிறிஸ்து இருக்கிறார்.

**“...இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.” (யோவான் 8:12)**





"....அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக."



**இதன் நிஜமான பொருள் என்ன?**

மேலும்,

அதைப் புசிக்க வேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்......"

**ஏன் புசிக்க வேண்டும்?**

உண்மையில் இவைகளும்கூட தேவன் காரணத்தோடே இஸ்ரயேலருக்கு கட்டளையாக கொடுத்து இருக்கிறார். இவை எல்லாவற்றின் (நிஜமான பொருள்கள்) ஆவிக்குரிய அர்த்தங்களைகூட நாம் கண்டுணரவேண்டும்.

**ஏனெனில் இது கர்த்தருடைய பஸ்கா!**

[இவைகளை குறித்த விரிவான விளக்கங்கள் எங்களது தொடர் புத்தகங்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம்.]

ஆக வேதாகமத்தில் ஒரு பாடம் அல்லது தலைப்பை முழுமையாக ஆராய வேண்டுமெனில் இதுபோன்ற வழிமுறைகளை பயன்படுத்தினால் மட்டுமே உண்மையான சத்தியங்களை கற்கவும், தேவனுடைய திட்டத்தை அவரின் சித்தத்தை கற்று உணர்ந்து அதின்படி நடக்கிறவர்களாக இருக்க முடியும்.





இவ்வாறாக வேதாகமத்தை வாசிப்பதில் ஒரு முறைப்படுத்தப்பட்ட வழியை கண்டு, தேவன் நமக்கு வெளிப்படுத்த நினைக்கும் வழியிலேயே நாம் கற்றுணரும் போது அது பயனுள்ளதாகவும், ஒரு ஆசீர்வாதமான ஆராய்ச்சியாகவும் இருக்கும்.

ஏனெனில் தேவனுடைய ஊழியத்தில் நாம் எல்லா சத்தியங்களைக் குறித்தும் சரியான முழு அறிவு பெற்றிருப்பது அவசியம்.

கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் பற்றும்படிக்கு ஒரே நம்பிக்கை, ஒரே விசுவாசத்தின் கீழ் அழைக்கப்பட்டு இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் ஒன்றான மெய்தேவனையும், அவர் அனுப்பின இயேசுகிறிஸ்துவையும் அவர்களின் வார்த்தைகளையும் அறிகிற அறிவில் பரிசுத்த ஆவியோடு வளர்வதும்; விசுவாசத்தில் நிலைத்தும் இருப்போமாக!

**- ஆமென்!**

**"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.."**
**(யோவான் 8:32)**



“வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,..” (2தீமோ. 3:16)

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே!

“வேதாகமத்தை திறக்க உதவும் திறவுக்கோல்கள்”என்ற இந்த புத்தகத்தின் வழியாக வேதாகமத்தை ஆழ்ந்து தியானிக்க உதவும் சில திறவுக்கோல்களை பார்த்தோம்.

இதுமட்டுமல்லாது இன்னும்,



## வேதாகம காலக்கணக்கை படித்தல்

“கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.” (ஆமோஸ் 3:7)

## வரலாற்றோடு பொருத்தி படித்தல்

“காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை.” ( நீதி. 25:2)




## பக்திவிருத்திக்கேதுவாக படித்தல்

“மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு,..”(எபி. 12:1)





“அதிக உறுதியான தீர்க்கதரிசனமும் நமக்கு உண்டு; பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.”(2பேதுரு 1:19)

## தீர்க்க தரிசனங்களை படித்தல்



## வசனம் சொல்லப்பட்ட சூழ்நிலை மற்றும் காலங்களை அறிந்து படித்தல்

என ஒரு முறைப்படுத்தப்பட்ட வழிமுறையின்படி வேதாகமத்தின் ஆழமான சத்தியங்களை கர்த்தருடைய சுத்த கிருபையினால் அறிந்துகொள்ள

**ஒரு தொடர் வேதாகம பாட பயிற்சி வகுப்பபிற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**




வெவ்வேறான தலைப்புகளின் கீழ் பரிசுத்தமான சத்தியங்கள் புத்தகங்களாக கலந்துகொள்ளும் அனைவருக்கும் இலவசமாக கொடுக்கப்படும்.

வயது வரம்பு, கல்வி தகுதி, கட்டணமின்றி அனைவரும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்!

**For more details contact : 9244208043**






**VELLORE BIBLE STUDENTS**
"Blessing House", No.160, Vallimalai Road,
Vellore - 632007

9790369256
BibleStudent1874@outlook.com